**பிடபெத்தர பிரதேச சபை - 2023**
**---------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிடபெத்தர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பிடபெத்தர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு முதலீட்டுக் கணக்கில் ரூபா 359,589 தொகை மிகையாகவும், பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,602,900 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 02 நிலையான வைப்புக்கள் கணக்கு தொடர்பாக பெற வேண்டிய வட்டி ரூபா 360,206 தொகை மற்றும் அடிச்சீட்டுப் புத்தகங்கள் இருப்பின் பெறுமதி ரூபா 52,434 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டு நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 846,189 தொகைக்கான பொருட் பதிவேட்டுப் பண்டங்கள் மீளாய்வாண்டு இறுதியில் நாட்குறிப்பு மூலம் அகற்றும் போது அந்தத் தொகை பொதுக் களஞ்சிய இருப்புக்கு, திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டமையால் அந்தத் தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | பொருட் பதிவேட்டுத் தண்மையுள்ள ரூபா 255,903 தொகை பெறுமதியான 132 விடயங்கள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | களஞ்சியத்திற்கு ஏத்தாணை தயாரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 511,192 தொகையினை மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டு நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 02 நிர்மாண வேலைகளுக்காக பெற வேண்டிய / செலுத்த வேண்டிய தொகை ரூபா 194,957 தொகையினால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 381,087 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | 2024 ஆண்டில் சரி செய்யப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 14,922,052 தொகைக்கான 13 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | 2024 ஆண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கிப் பேணிச் செல்லப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நி.பி. 571 | ரூபா 950,391 தொகைக்கான காலவதியான 43 பொது வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் சரி செய்யப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 14,159,614 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 19,640,754 தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,696,000 | 1,763,365 | 2,564,981 | 898,713 | 1,687,000 | 1,500,829 | 1,700,085 | 1,700,329 |
| வாடகை | 23,048,240 | 17,098,748 | 16,848,183 | 2,959,362 | 23,053,480 | 18,802,283 | 18,542,216 | 2,708,797 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,155,100 | 1,182,576 | 1,147,176 | 106,922 | 1,155,100 | 1,525,768 | 1,525,768 | 71,522 |
| ஏனைய வரு மானங்கள் | 2,846,500 | 5,051,973 | 4,899,596 | 409,383 | 4,246,500 | 1,318,150 | 1,480,786 | 257,006 |
| மொத்தம் | 28,745,840 | 25,096,662 | 25,459,936 | 4,374,380 | 30,142,080 | 23,147,030 | 23,248,855 | 4,737,654 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 317,993 இற்கான நிலுவை ஏக்கர் வரி மீதியொன்று காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 309,006 இற்கான மீதிகள் நீண்ட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. | ரூபா 309,006 இற்கான நீண்ட கால நிலுவைத் தொகையை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு 2024 ஏப்ரல் 26 திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிலுவை குப்பை வரி வருமானம் ரூபா 468,760 தொகை காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 274,160 தொகை 03 வருடங்களை மிகைத்துள்ள மீதிகளாகும். | அறவிடப்படாத மீதி 2024 ஆண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 11 இடங்களில் காணப்படும் 121 கடை அறைகளில் 109 கடைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 74 கடையறைகளில் இருந்து ரூபா 2,181,979 தொகைக்கான கடை வாடகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | அறவிடப்படாத மீதி 2024 ஆண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 18 கடையறைகள் தொடர்பாக உடன்படிக்கை காலவதியாகி 01 வருடம் மற்றும் 23 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்த உடன்படிக்கைகளை நாளதுவரை ஆக்குவதற்கு அல்லது சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 24 கடையறைகளுக்கான உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்ததுடன், நிலுவையாக காணப்பட்ட 19 கடையறைகளுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், 03 கடைகளுக்காக எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெறப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,049,598 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 17,469,691 தொகையாகக் காணப்பட்டது. | 2024 ஆண்டு ஏப்ரல் மாதம் இறுதியளவில் முத்திரைக் கட்டணம் ரூபா 10,173,842 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,049,598 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேதனப் பசளை செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்காக வனசிங்க கந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 8.43 ஹெக்டயர் அளவான காணிப் பகுதியொன்று 2013 ஆண்டில் சபைக்கு உரித்தாக்கி 2015 ஆண்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் செயற்படுத்தப்படுகின்ற பிலிசரு செயற்திட்டத்துடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை செயற்திட்டத்தன் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சேதனப் பசளை செயற்களத்தின் நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் ஒதுக்கிக்கொள்வதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்று செயற்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | முறையான குப்பை முகாத்துவத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களினாலும் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளை இலகுபடுத்தல், வினைதிறனாக்கல் மற்றும் வருானத்தை விரைவாக சேகரிப்பதற்காக நிகழ்வு நிலை முறைமை அறிமுகப்படுத்தல் கட்டாயமாக இருந்த போதிலும், சபைக்கு இணையதளமொன்று நிர்மாணித்து கொடுப்பனவு வசதிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணையதளமொன்று நிர்மாணிப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கத்துவர்கள் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆண்டில் ரூபா 167,750 தொகை செலவிடப்பட்டு சபை வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த உயிர் வாயு அலகின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற உயிர் வாயு எண்ணிக்கை நாளாந்தம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், அதன் செயற்பாடு மற்றும் நுகர்வினை | தற்போது நுகரப்பட்டு வருகின்றது என. | செயற்பாடுகளை மற்றும் நுகர்வுகளை உச்ச மட்டமாக்க வேண்டும். |

உச்சமட்டத்தில் ஆக்குவதற்கு சபை கவனம் செய்திருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நகர எல்லையில் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் இன்றி 05 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதுடன், அது தொடர்பாக சபையினால் தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 மே 08 திகதி நடைபெற்ற திட்டக் குழுவில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக தீர்மானிக்கப்பட்டதென. | வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கடந்த ஆண்டின் போது மண் வெட்டி அபிவிருத்தி செய்வதற்காக 07 பாதைகளுக்கும் ஹியூம் குழாய்கள் போடுவதற்காக ரூபா 690,593 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய ரேட்கள் பயப்படுத்தப்படாமையால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 171,584 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஹியூம் குழாய்கள் விரிப்பதற்காக அறிமுகப்படுத்தியிருந்த ST–068, ST – 069, ST – 070 மற்றும் ST – 071 என ரேட்களுக்கு மண் அகழ்தல், ஹியூம் குழாய்கள் போக்குவரத்து, ஹியூம் குழாய்கள் ஏற்றுதல் மற்றும் இறக்குதல், ஹியூம் குழாய் பொருத்தப்பட்ட பின்னர் மண் போட்டு தகர்த்தல் ஆகியவை அடங்கவில்லை எனவும், தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2022 முதலாவது அரையாண்டின் ரேட் பயன்படுத்தப்பட்டு மதிப்பீடு மற்றும் பில் பத்திரங்கள் தயாரித்து கொடுப்பனவு செய்யும் போது மேற்கூறிய 04 கருமங்களுக்காக தனியாக கொடுப்பனவு செய்யப்படவில்லை என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | PC – 30 இனத்தைச் சேர்ந்த எக்சவேட்டர் இயந்திரம் ஒன்றை பயன்படுத்தி 04 பாதைகளின் இரண்டு பக்கங்களிலும் வடிகால் | விரசேகர கந்த பாதை, அலுவன கந்த பாதை, வடதெனிவல பாதை வாடிகால்கள் தயாரித்தல் | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெட்டுவதற்காக கொடுப்பனவு செய்யும் போது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அறிமுகப்படுத்தியிருந்த DR – 005A ரேட்டுக்குப் பதிலாக மனித உழைப்பைப் பயன்படுத்தி அந்த கருமத்தை நிறைவேற்றுவதற்காக அறிமுகப்படுத்தியிருந்த DR – 001 ரேட்டை பயன்படுத்தி இருந்தமையால் ஒப்பந்தர்காரர்களுக்கு ரூபா 91,091 தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மனித உழைப்பு மூலம் மேற்கொள்ளப்பட்டதெனவும், வனசிங்க கந்த ஊடாக சியம்பலாகொட பாதையில் அகலம் கூடிய இடங்களில் மாத்திரம் வடிகால்கள் தயாரிக்கும் போது மற்றும் பாதையை சமப்படுத்தும் போது PC – 30 இனத்தைச் சேர்ந்த எக்சவேட்டர் இயந்திரம் பயன்படுத்தி மீதிகளைப் பகுதி மனித உழைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டதெனவும். | |
| (இ) | சபையில் முன்பக்க பாதுகாப்புடைய கதவு தயாரிப்பதற்குரிய வேலை தொடர்பாக Powder coated அலுமினியம் பயன்படுத்தப்பட்டு கதவுச் சட்டங்கள் மற்றும் லூவர் தயாரிப்பதற்கு பதிலாக Aluminium bronze anodized அலுமினியம் சட்டங்களை பயன்படுத்தி குறிப்பிட்ட கருமத்தை பூர்த்தி செய்வதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 224,704 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | Powder coated Aluminium அதற்காக செலுத்தியிருந்த ரூபா 224,704.30 தொகையும், Aluminium bronze anodized இற்காக செலுத்த வேண்டிய ரூபா 212,472.43 தொகைகளுக்கு இடையேயான வித்தியாசம் என மிகையாகச் செலுத்தியிருந்த ரூபா 12,232 இற்கான தொகை தடுத்து வைத்தல் பணத்திலிருந்து கழித்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியான ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் வாகனங்கள் கழுவும் செயற்களத்தின் கூரை வேலை விபரங்களின் பிரகாரம் பலகைக்கு களிம்பு பூசியிருக்காத போதிலும், அதற்காக ரூபா 222,689 தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக தடுத்து வைத்தல் பணம் விடுவித்திருக்காமையால் ஒப்பந்தக்காரர் மூலம் பலகை பாதுகாப்பு களிம்பு பூசிய பின்னர் தடுத்து வைத்தல் பணம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிறைவேற்றப்பட்டுள்ள வேலைப் பகுதிகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (உ) | பிரதேச சபை கட்டிடத்தின் மேல் மாடி நிர்மாண வேலைகளுக்காக 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 08 சந்தர்ப்பங்களில் ரூபா 12,474,726 தொகை பெறுமதியான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூபா 10,936,007 இற்கான உடன்பட்ட தொகைக்கு தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவர் மற்றும் | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என. | அனைத்து கருமங்களையும் இனங்கண்டு மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரித்து ஒப்பந்த வேலையை செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றிற்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்த போதிலும், கட்டிடத்தின் மேல் மாடியில் அனைத்து வேலைகளும் அடங்கக்கூடியவாறு நிர்மாண வேலைகள் திட்டமிடப்பட்டு மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு காணப்படும் ஏற்பாடுகளை கவனத்தில் எடுத்து நிலைவேற்றப்பட வேண்டிய வேலைகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படாமையால் 2024 ஜனவரி 24 திகதி அளவிலும் மேல் மாடியின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் கடமையாற்றிய 2011 ஆண்டுக்கும் 2023 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஓய்வுபெற்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 05 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 111,313 தொகைக்கான கடன் மீதிகள் அறவிடப்படாமல் காணப்பட்டது. | 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையில் கடமையாற்றும் 12 ஆரம்ப தர தொழலாளர்களுக்கு பதவிக்குரிய கடமைகள் அல்லாத கடமைகள் சாட்டப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 5,464,122 இற்கான தொகையொன்று சம்பளம் ஒன்று சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | சேவையின் தேவைப்பாட்டின் படி கடமை சாட்டப்பட்டதென. | பதவிக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |